TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
Building a Nation of Integrity

Media Release 2009/Tam/3

# ஊடக அறிவிப்பு

2009.01.08

சர்வதேச நேர்மைத்திறன் விருது வெற்றியாளர் படுகொலை

சண்டே லீடர், பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டமைக்காக ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் தனது ஆழ்ந்த துக்கத்தையும் அதிர்ச்சியையும் தெரிவிக்கின்றது. லசந்த பத்திரிகைத்துறையின் முன்னோடியாவார். அவரது உயிருக்கு அச்சுறுத்தல் இருந்த போதும் ஊடகத்தின் மூலமாக துணிவுடன் ஊழலுக்கெதிராக போராடிவந்தார்.

2000 ஆண்டில், அவரது சேவை சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கபட்டு ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனலின் முதலாவது நேர்மைத்திறன் விருது வழங்கி அவர் கௌரவிக்கப்பட்டார்.

நாட்டின் கருத்துச் சுதந்திரத்துக்காக மிக மோசமான நிலைமை நிலவுவதை திரு. விக்கிரமதுங்கவின் படுகொலை வெளிப்படுத்துகின்றது. சுதந்திரமான ஊடகம் சனநாயக நாட்டின் பிரதானமான அம்சமாகும். சிறந்த நல்லாட்சிக்கான முன்தேவையாகவும் அது விளங்குகிறது. பத்திரிகையாளர் மீது அவர்களது நிறுவனங்கள் மீதும் மேற்கொள்ளப்படும் எந்தவொரு தாக்குதலும் இந்த நாட்டின் நல்லாட்சியை மேலும் சிதைவடையச் செய்து, இறுதியில் எல்லா இலங்கையருக்கும் பாதுகாப்பற்ற சூழலை உருவாக்கி விடும்.

திரு. விக்கிரமதுங்கவின் படுகொலையும் கடந்த திங்களன்று எம்ரிவி/எம்பிசி கலையகத் தொகுதியின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலும் இலங்கையில் எதிர்கால சனநாயத்தை மகிமையற்றதாக்கிவிடும். இத்தகைய தொடர் நிகழ்ச்சிகள் அரச யந்திரத்தின் மீது வலுவான பொறுப்புக்களை சுமத்துகின்றது என்பதோடு குற்றமற்ற அல்லது குழப்பமற்றவராக தன்னை வெளிப்படுத்துவதற்கு அரசாங்கம் பராபட்சமற்ற விசாரணையை விரைவாக மேற்கொள்ள வேண்டும்.

ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா